# முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி
# முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்.,
# முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.
# எம்.சி.ஓ.பி. எண். 173/2022

2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11ம் நாள் புதன்கிழமை. இந்திய உறுதிமொழி சட்டம் (44–1969) 10வது விதி 4ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

ம.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. கோட்டீஸ்வரன் | | |
| த/பெ. | முனுசாமி | வட்டம் | சென்னை |
| கிராமம் | எண்ணூர் | வயது | 53 |
| தொழில் | இசையமைப்பாளர் | மாவட்டம் | சென்னை |

**முதல் விசாரணை**

1. நான் இந்த வழக்கில் மனுதாரர் ஆவேன். இந்த வழக்கின் சங்கதிகள் அனைத்தையும் நான் நன்கு அறிவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை நான் பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தாயரிக்கப்பட்து அந்த விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடைய தான். ம.சா.ஆ 1 முதல் 13வரை எனது தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்யதுள்ளேன்.

**<u>மனுதாரர் தரப்பு சான்று ஆவணங்கள்</u>**

| | |
|---|---|
| ம.சா.ஆ 1 | முதல் தகவல் அறிக்கை நகல் |
| ம.சா.ஆ 2 | பதிவு புத்தகம் நகல் |
| ம.சா.ஆ 3 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல் |
| ம.சா.ஆ 4 | காயச்சான்றிதழ் நகல் |
| ம.சா.ஆ 5 | மனுதாரருடைய ஆதார் அட்டை நகல் |
| ம.சா.ஆ 6 | குற்றப்பத்திரிக்கை நகல் |
| ம.சா.ஆ 7 | மருத்துவ விடுவிப்பின் சுருக்கம் அசல் |
| ம.சா.ஆ 8 | இராமச்சந்திரா மருத்துவமனை சிகிச்சை ஆவணம் அசல் |
| ம.சா.ஆ 9 | மருத்துவ செலவு ரசீதுகள் அசல் |
| ம.சா.ஆ 10 | கதிரியக்கப்படம அசல் |
| ம.சா.ஆ 11 | மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நகல் |
| ம.சா.ஆ 12 | வங்கி கணக்கு பட்டியல் பதிவிறக்க நகல் |
| ம.சா.ஆ 13 | பணி அடையாள அட்டை நகல் |
| நீ.ம.சா.ஆ 1 | மனுதாரரின் ஊனச் சான்றிதழ் அசல் |

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை.**

விபத்து நடந்தபோது நான் இருசக்கர வாகனத்தில் சின்னநொளம்பூரிலிருந்து ஸ்ரீராம் நகருக்கு சென்றுக்கொண்டிருந்த போது வளைவிலிருந்து அதிவேகமாக வந்த இருசக்கர வாகனம் வளைவில் திரும்பிய போது என் மீது மோதி விபத்து ஏற்பட்டது. மேற்கு முகப்பேரில் உள்ள எஸ்.எம் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றேன். முட்டியில் ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை வழங்கினார்கள். எனக்கு வலி அதிகமாக இருந்ததால் ராமச்சந்திரா மருத்துவமனையில் மேல் சிகிச்சை பெற்றேன். அங்கு எனக்கு ஸ்கேன் எடுத்து பார்த்து சிகிச்சை அளித்தார்கள். அதன் பிறகுதான் புகார் கொடுத்தேன். அதன் பிறகு 23ம்

தேதி எம்.எம்.எஸ் மருத்துவமனையில் மேல் சிகிச்சை பெற்றேன். அங்கு இடது கால் முட்டியில் அறுவை சிகிச்சை செய்து பிளேட் பொருத்தியுள்ளார்கள். அங்கு 3 நாட்கள் உள் நோயாளியாக சிகிச்சை பெற்றேன். அந்த பிளேட் இன்னும் இடது கால் முட்டியில்தான் உள்ளது. விபத்து சமயத்தில் நான் இசையமைப்பாளராக பணிப்புரிந்தேன். எனது அடையாள அட்டையும் வங்கி கணக்கு புத்தக நகலையும் தாக்கல் செய்துள்ளேன். 10.10.2021 ல் விபத்து நடந்தது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது 17.12.2021 . சுமார் 64 நாட்கள் கழித்துதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட உள்ளது என்றால் சரிதான். என் மீது மோதிய வாகனத்தின் பதிவு எண் நான் பார்த்தேன். அங்கிருந்த மக்கள் என் மீது மோதிய வாகனத்தை விபத்து நடந்த அன்று பிடித்து வைத்தார்கள். 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தால் விபத்து நடைப்பெறவில்லை என்றால் சரியல்ல. அந்த வாகனத்தால் விபத்து ஏற்பட்டிருந்தால் நான் அன்றைய தேதிக்குரிய விபத்து பதிவேட்டை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. அதே தேதியில் புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் 13 நாட்கள் கழித்துதான் மருத்துவமனையில் சேர்ந்தேன் என்றால் சரியல்ல. என்னுடைய மருத்துவ விடுவிப்பில் விபத்து பற்றிய குறிப்பு இல்லை என்றால் சரியல்ல. எங்கேயோ ஏற்பட்ட விபத்திற்கு நானாக ஜோடித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி